சி.சி. 57/2022.
அ.சா. 6 துரைசிங்கம்(சார்பு ஆய்வாளர்)

07.07.2023
சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். கு.வி.மு.ச. பிரிவு 311–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.

1. சம்பவம் 26.01.2022ம் தேதியன்று பகல் 12.30 மணிக்கு நடைபெற்றது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் வீரசோழன் காவல் நிலையத்திற்கும் சுமார் 7 கிமீ தூரம் இருக்கும். பாதிக்கப்பட்ட நபர் சம்பவ நடந்த 4 1/2 மணிநேரத்திற்கு பின்பு காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க வந்தார். சம்பவ இடத்திலிருந்து வீரசோழன் காவல் நிலையத்திற்கு சுமார் 1/2 மணிநேரத்தில் வந்தவிடலாம் என்றால் சரிதான். உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் பாதிக்கப்பட்ட நபர் காவல் நிலையத்திற்கு 1/2 மணி வந்திருக்கலாம் என்றாலும் சம்பவம் நடக்காமல் இருந்ததால்தான் எதிரியிடம் இருந்து பணம் பறிப்பதற்காக பின் யோசனையின்பேரில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 26.01.2022 மாலை 5 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தால் நீதிமன்றத்திற்கு அதை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அன்றைய தினம் புகாரும் கொடுக்கவில்லை ரசீதும் போடவில்லை என்றாலும் சரியல்ல. முதல் கட்ட விசாரணையில் யார் யாரை எந்த இடத்தில் வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்பு 27.01.2022ம் தேதி சாட்சிகளை விசாரித்தேன். அதற்கு முன்பு யாரையும் விசாரிக்கவில்லை. அசா2, அசா1ன் தாயார் என்றாலும் அசா3 மாமா என்றாலும் சரிதான். அசா4, 5 உறவினர்கள் என்றால் தெரியாது. ஏற்கனவே புகார்தாரக்கும் எதிரிக்கும் கணவன் மனைவி உறவுமுறை இருந்துள்ள விவரம் தெரிய வந்ததா என்றால் இல்லை. அசா1க்கும் எதிரிக்கும் பழக்கம் இருந்ததுள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. புகார்தாரும் அவரது குடும்பமும் எதிரியின் பணத்தை வாங்கி வந்தார்கள் என்றாலும் எதிரிக்கும் எதிரியின் மனைவிக்கும் ஏற்பட்ட தகராறில் எதிரி புகார்தாரின் பழக்கத்தை நிறுத்திவிட்ட சங்கதியை எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் இல்லை. சம்பவ நடந்த அன்று எதிரி சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் எதிரி அசா1ஐ கட்டிப்பிடித்து சேலையை இழுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அசா1

எதிரிபோன் செய்ததாக சொல்லி உள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு எத்தனை மணிக்கு போன் செய்தார் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. அசா1 குளிக்கும் வீடியோவை வாட்ச்ப்ஆப், பேஸ்க்புக் போன்றவற்றில் போட்டுவிடுவேன் என்று மிரட்டிஉள்ளார் என்றுசொல்லி உள்ளார் என்றால் சரிதான். நான் எனது விசாரணையில் மேற்படி வீடியோக்களையோ போட்டோக்களையோ எதிரியின் போனையோ கைப்பற்றவில்லை. அது குறித்து விசாரிக்கவும் இல்லை. பொய்யான குற்றச்சாட்டு என்பதால் தான்மேற்படி ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவதன்று புகார் கொடுக்க ஏற்பட்ட 4 1/2 மணிநேரம் காலதாமதத்திற்கு அசா1 தன் பயந்து கொண்டு புகார் கொடுக்க வரவில்லை என்று சொல்லி உள்ளார். அசா1 அவரது புகார்மனுவிலோ என்னுடைய விசாரணையிலோ, விசாரணை வாக்குமூலத்திலையோ அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனு பெற்று அன்றையதினம் வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு செல்லாத காரணத்தை நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. பாதிக்கப்பட்ட நபர் ஒரு பெண் என்பதால் புகார் பதிவு செய்தவுடன் சம்பவ இடத்திற்கு செல்லவேண்டும் என்று சட்ட விதிமுறைகள் தெரியுமாஎன்றால் தெரியும். எல்லா வழக்குகளுக்கும் சம்பவ இடம் செல்ல தேவையில்லை. அசா1 மற்றும் அவரது குடும்பத்தினர் எதிரியை பழிவாங்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் எனது கையெழுத்து இல்லை என்றால் சரிதான். காவல் நிலைய எழுத்தர் எழுதினார்.

3. பார்வைமகஜரில் அசா4, 5 சாட்சிகள் வீடுகள் அந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் சாட்சிகளில் சொல்லப்பட்டுள்ள கருப்பையா, கருப்பு, ஆகியோர்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பார்வைமகஜர், வரைபடம் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பந்தப்பட்ட எதிரியை விசாரித்தேன் என்றால் சரிதான். புகார்தாருக்கும் எதிரிக்கும் ஏற்கனவே இருந்த பழக்கவழக்கத்திற்குண்டான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான். எனது புலன் விசாரணை முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. அசா1 என்ன கலர் சேலை, ஜாக்கெட் கட்டியிருந்தார் என்பது எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் ஞாபகம் இல்லை. விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை. சாட்சிகளை சரிவர விசாரிக்கவில்லை என்றாலும் சரியான முறையில் புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருப்பதால்

சரியான புலன் விசாரணை மேற்கொண்டு இருந்தால் இவ்வழக்கினை தவறான வழக்கு என்று குற்றஇறுதிஅறிக்கை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. அசா1 எதிரியிடம் பேச்சை நிறுத்திவிட்டேன் என்று சாட்சியம்அளித்துள்ள விபரம் தெரியும். எவ்வளவு நாட்களாக அசா1 எதிரியிடம் பேசவில்லை என்று எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை. எதிரி மீது போடப்பட்டுள்ள பொய் வழக்கு என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் நடக்கும்போது அசா 2, 3 அசா1ன் மாமா என்றால் சரிதான். சம்பவத்தின்போது அசா2 காளிமுத்து வீட்டில் அசா2, 3 இருந்தார்கள் என்றால் சரிதான்.

மறு விசாரணை –

4. இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.